

## பா.ஜ.க.வின் சூழ்ச்சிக்கு அ.தி.மு.க. துணை போய்க் கொண்டிருக்கிறது:

# மோடியும், அமித்ஷாவும் மாறி மாறி வருகிறார்கள்... நிதியும் திட்டங்களும்தான் நமக்கு வருவதில்லை!

## மதுரையில் நடைபெற்ற ‘களத்தில் இளைஞர் அணி’ கூட்டத்தில்

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!




மதுரை, மார்ச் 28 –

**மதுரையில் நடைபெற்ற, மதுரை மற்றும் விருதுநகர் மாவட்டங்களைச் சேர்ந்த மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்களுடன் ‘களத்தில் இளைஞர் அணி’ தேர்தல் பிரச்சாரம் குறித்த ஆலோசனைக் கூட்டத்தில், கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு உரையாற்றினார்.**

அப்போது அவர், “தேர்தல் அறிவித்தவுடன் பிரதமர் மோடி அவர்களும், அமித்ஷா அவர்களும் மாறி மாறி வருகிறார்கள். தமிழ்நாட்டுக்கு நிதி வரவில்லை. திட்டங்கள் வருவதில்லை. இவர்கள் இருவரும் மாறி மாறி வந்துவிட்டுச் செல்கிறார்கள். ஆனால் இதையெல்லாம் அவர்களுடன் கூட்டணி வைத்திருக்கும் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி கேட்டிருக்க வேண்டும். கேட்கிறாரா? இல்லை. பா.ஜ.கவின் இந்தச் சூழ்ச்சிக்கு இன்று அ.தி.மு.கவும் துணை போய்க் கொண்டிருக்கிறது” என்று குறிப்பிட்டார்.

கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:

ஒருங்கிணைந்த மதுரை மாவட்டம் மற்றும் விருதுநகர் மாவட்ட இளைஞர் அணியில் இருக்கக்கூடிய ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக அமைப்பாளர், துணை அமைப்பாளர்களாகிய உங்களையெல்லாம் ஒரே இடத்தில் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

### இளைஞர் அணி நிர்வாகிகள்

மதுரை மாவட்டமும் விருதுநகர் மாவட்டமும் எப்போதுமே தி.மு.கவின் கோட்டை என்று சொன்னால் அது மிகையாகாது. வீரத்துக்கும் பாசத்துக்கும் பெயர் பெற்ற மதுரை மண்ணுக்கு மீண்டும் மீண்டும் வருகை தந்து உங்களையெல்லாம் மீண்டும் மீண்டும் சந்திக்கிறேன். நாம் பத்து நாட்களுக்கு ஒரு முறை சந்தித்துக் கொண்டிருக்கிறோம்.

கடந்த மாதம் ஏழாம் தேதி தெற்கு மண்டல இளைஞர் அணி நிர்வாகிகள் சந்திப்பை இந்தியாவே திரும்பிப் பார்க்கின்ற அளவுக்கு ஒரு மிகப் பெரிய மாநாடு போல விருதுநகரில் நடத்திக் காட்டினோம். அந்த வெற்றிக்காக நீங்கள் அனைவரும் உழைத்திருக்கிறீர்கள். எனவே, அதற்கு நன்றி தெரிவிப்பதற்காகத் தான் மீண்டும் நான் வந்திருக்கிறேன். ஏற்கனவே ஒரு முறை இதே மதுரையில் நன்றி தெரிவித்தோம். மீண்டும் ஒரு முறை என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### மிகப் பெரிய வெற்றி

எவ்வாறு நாடாளுமன்றத் தேர்தலின் போது, `களத்தில் இளைஞர் அணி’ என்று ஒரு முன்னெடுப்பை எடுத்து நீங்கள் ஒவ்வொருவரும் களத்தில் இறங்கிப் பிரச்சாரத்தை மேற்கொண்டீர்களோ, மக்களைச் சந்தித்து வாக்குகளைச் சேகரித்தீர்களோ, உங்களின் பிரச்சாரத்தின் காரணமாகத்தான் நாடாளுமன்றத் தேர்தலில் மிகப் பெரிய வெற்றி, 100 சதவிகித வெற்றியை நாம் அடைந்தோம். இப்போது மீண்டும் சட்டமன்றத் தேர்தலுக்கு நம் பணிகளை, `களத்தில் இளைஞர் அணி’ பணிகளை நாம் தொடங்க வேண்டும்.

இன்னும் சரியாக 30 நாட்கள் இருக்கின்றன. இன்றைய தேதி 24, தேர்தல் ஏப்ரல் 23ஆம் தேதி நடைபெற உள்ளது. நம் கைகளில் இன்னும் சரியாக 30 நாட்கள் இருக்கின்றன. இந்த 30 நாட்களும் நாம் என்ன செய்ய வேண்டும், எவ்வாறு நம் பணிகளை வகுத்துக்கொள்ள வேண்டும் என்று பேசுவதற்காகத்தான் உங்களையெல்லாம் அழைத்திருக்கிறேன்.

இன்று இந்தியாவிலேயே பல கட்சிகள் பூத் கமிட்டி அமைப்பதற்கே திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள், திணறிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட இந்த நேரத்தில் நாம் ஒவ்வொரு பூத்துக்கும் ஒரு இளைஞர் அணி நிர்வாகியை நியமித்திருக்கிறோம். இது மிகப் பெரிய ஒரு சாதனை. இவ்வளவு பெரிய ஓர் இளைஞர் படையை நாம் வைத்திருக்கிறோம். இந்த இளைஞர் படையைத் தேர்தல் என்கிற போருக்கு நாம் தயாராக வைத்திருக்கிறோம்.

### மக்கள் பணி, கழகப் பணி

நாம் கடந்த ஐந்து ஆண்டுகளாகப் பல பணிகளுக்காக உழைத்திருக்கிறோம். இளைஞர் அணிப் பணிகளிலேயே பல பணிகளைச் செய்திருக்கிறோம். தொடர்ந்து மக்கள் பணி, கழகப் பணி, இளைஞர் அணி பணி எனத் தலைவர் என்ன சொன்னாலும் செய்து கொடுத்திருக்கிறோம். ஆனால், இப்போது கடைசி நேரத்தில் நாம் அதைவிட அதிகமாகத் தீவிரமாக உழைக்க வேண்டும். ‘இறுதி உந்துதல்’ (Final Push) என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். கடைசி நேரத்தில் இந்தக் கூடுதல் முயற்சியை நாம் எடுத்தாக வேண்டும்.

தேர்தல் வாக்குறுதியில் சொன்னதை மட்டும் அல்ல, சொல்லாத பல திட்டங்களையும் நாம் செய்து கொடுத்திருக்கிறோம் என்கிற துணிச்சலில் மக்களைச் சந்திக்க நாம் செல்கிறோம். இன்று இந்தியாவிலேயே ஒரு முதலமைச்சர் தினமும் நேரடியாக மக்களைச் சந்திக்கிறார் என்றால், அது நம் தலைவர்தான், நம் முதலமைச்சர் அவர்கள்தான். அவர் வழியில் நாமும் தினமும் மக்களைச் சந்திக்கப்போகிறோம். வாக்குகளைக் கேட்டுச் செல்லப் போகிறோம். அப்படிச் செல்லும்போது நம் திட்டங்களை நாம் தெரிந்துகொண்டு செல்ல வேண்டும். உதாரணமாகச் சில திட்டங்களை மட்டும் உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

### மகளிருக்கு விடியல் பயணத் திட்டம்

ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் நம் தலைவர் அவர்கள், முதலமைச்சராக அமர்ந்து முதலில் கையெழுத்திட்ட திட்டம் மகளிருக்கு விடியல் பயணத் திட்டம். இன்று அந்தத் திட்டத்தில் 920 கோடி பயணங்களை மகளிர் மேற்கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு மகளிரும் 900 ரூபாயிலிருந்து 1000 ரூபாய் வரை இந்தத் திட்டத்தின் மூலம் சேமித்திருக்கிறார்கள்.

அதேபோன்று நம் தலைவர் தொடர்ந்து சொல்வதுதான், “குழந்தைகளைப் படிக்க வையுங்கள், கல்வி மிக முக்கியம், படிக்க வேண்டும். தொடர்ந்து படி, கல்விதான் உங்களிடமிருந்து பிரிக்க முடியாத சொத்து” என்று நம் தலைவர் அடிக்கடி சொல்வார். அதை ஊக்குவிக்க வேண்டும், குழந்தைகள் எல்லாம் படிக்க வேண்டும் என்பதற்காகத்தான் முதலமைச்சர் காலை உணவுத் திட்டம். அரசுப் பள்ளியில் ஒன்றாம் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் அனைத்துக் குழந்தைகளுக்கும், பள்ளிக்கு வந்தால் முதலில் தரமான உணவு, அதன் பிறகு, தரமான கல்வி வழங்கபடுகிறது. ஒவ்வொரு நாளும் 20 இலட்சம் குழந்தைகள் முதலமைச்சர் காலை உணவுத் திட்டத்தில் பயன்பெற்று வருகிறார்கள்.

### உயர்கல்வி சேர்க்கை விகிதம்

சரி, குழந்தைகள் பள்ளிக்கு வந்துவிட்டார்கள், அடுத்து கல்லூரிகளுக்குச் செல்ல வேண்டும். ஜி.இ.ஆர் என்று சொல்வார்கள் (Gross Enrollment Ratio). ஜி.இ.ஆர் என்றால் என்ன? பள்ளிப் படிப்பை முடித்துவிட்டு எத்தனை சதவிகிதம் பேர் கல்லூரியில் சேருகிறார்கள் என்கிற கணக்குதான். இந்தியாவின் மொத்த உயர்கல்வி சேர்க்கை விகிதம் 26 சதவிகிதம். ஆனால், தமிழ்நாட்டின் மொத்த உயர்கல்வி சேர்க்கை விகிதம் கிட்டத்தட்ட 50 சதவிகிதம். இது இந்திய சராசரியைவிட இரண்டு மடங்கு அதிகம். இன்று இந்தியாவிலேயே ஜி.இ.ஆர் அதிகம் உள்ள மாநிலம் நம் தமிழ்நாடுதான். அதற்குக் காரணம் நம் தலைவர் அவர்கள், நம் முதலமைச்சர் கொண்டு வந்திருக்கக்கூடிய கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கக்கூடிய அந்தத் திட்டங்கள்தான்.

பள்ளி பயின்ற குழந்தைகள் கல்லூரிக்குச் சென்று பயில வேண்டும். அதற்காக அரசுப் பள்ளியில் பயின்று எந்தக் கல்லூரியில் சேர்ந்து என்ன கல்வி கற்றாலும், அது தனியார் கல்லூரியாக இருந்தாலும் அவர்களுக்கு மாதம் கல்வி உதவித் தொகையாக 1,000 ரூபாய் வழங்கப்படுகிறது. மாணவர்களாக இருந்தால் ‘தமிழ்ப் புதல்வன்’ திட்டம், மாணவிகளாக இருந்தால் ‘புதுமைப் பெண்’ திட்டம். இன்று 13 இலட்சம் மாணவ, மாணவிகள் இதில் பயன்பெற்றுள்ளனர்.

300 வீரர்களுக்கு அரசு வேலைவாய்ப்பு

வரலாற்றிலேயே முதன்முறையாக 3 சதவிகித இடஒதுக்கீட்டில் விளையாட்டு வீரர்களுக்கான வேலைவாய்ப்பில் 300 வீரர்களுக்கு அரசு வேலைவாய்ப்பை நம் அரசு வழங்கியுள்ளது.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம் பற்றி உங்களிடம் பலமுறை சொல்லியிருக்கிறேன். இது தேர்தல் அறிக்கையில் சொன்ன திட்டம். இன்று ஒரு கோடியே 31 இலட்சம் மகளிருக்கு 1,000 ரூபாய் வீதம் கடந்த மூன்று ஆண்டுகளாக நம் அரசு வழங்கியுள்ளது. ஒரு கோடியே 31 இலட்சம் மகளிருக்கு 36,000 ரூபாய் வரை வழங்கியிருக்கிறோம்.

அந்தத் திட்டத்தை எப்படியாவது தேர்தலைக் காரணமாகக் காட்டி நிறுத்த வேண்டும் என்று முயன்றார்கள். சில மாநிலங்களில் நிறுத்தியும் இருக்கிறார்கள். ஆனால் நம் தலைவர், “நான் 1,000 ரூபாய் கொடுப்பதை நிறுத்துகிறீர்களா? இப்போது நான் 5,000 ரூபாய் கொடுக்கிறேன், நிறுத்துங்கள் பார்க்கலாம்” என்று கூறி, இன்று ஒரு கோடியே 31 இலட்சம் மகளிருக்கு 5,000 ரூபாய் வழங்கியிருக்கிறார்கள். அத்துடன் சேர்த்து இன்னொரு வாக்குறுதியையும் கொடுத்திருக்கிறோம்.

மகளிர் உரிமைத் தொகை 1,000 ரூபாயாக இருந்தது, மீண்டும் நம் திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைந்தவுடன், அந்த உரிமைத் தொகையை 1,000 ரூபாயிலிருந்து 2,000 ரூபாயாக உயர்த்திக் கொடுப்போம் என்கிற வாக்குறுதியையும் நம் தலைவர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள்.

### மதுரை மற்றும் விருதுநகர் திட்டங்கள்

இன்னும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்றால், இன்று இந்த மதுரை மற்றும் விருதுநகரில் எத்தனையோ திட்டங்களைச் செயல்படுத்தியிருக்கிறோம். 45 கோடி ரூபாய் மதிப்பீட்டில், மதுரையில் ஜல்லிக்கட்டு அரங்கம் அமைக்கப்பட்டுள்ளது. திண்டுக்கல் சாலை முதல் தெப்பக்குளம் வரை 120 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வைகை தென்கரைச் சாலை அமைக்கப்பட்டுள்ளது.

மதுரையில் 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய உலகத் தரத்திலான ஹாக்கி மைதானம் கட்டப்பட்டுள்ளது. 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சிப் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது.

2,070 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முல்லைப் பெரியாற்றிலிருந்து மதுரை மாநகராட்சிக்குக் குடிநீர் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. மதுரை மாவட்டத்தில் உள்ள 870 கிராமப்புற குடியிருப்புகளுக்குக் கூட்டுக் குடிநீர் திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது.

50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வண்டியூர் ஏரி மேம்பாடு, 40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அழகர் கோயில் திருப்பணிகள், 6 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மதுரையில் புதிய ஒலிம்பிக் அகாடமி, 260 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அச்சம்பத்து விராட்டிபத்து வழியாக மதுரை புறவழிச்சாலை அமைக்கப்பட்டுள்ளது.

### கூட்டுக் குடிநீர் திட்டம்

விருதுநகர் மாவட்டத்தில் ராஜபாளையம், சிவகாசி உள்ளிட்ட பகுதிகளுக்குச் சுமார் 550 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர் திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது.

அருப்புக்கோட்டை, சாத்தூர் பகுதிகளில் கூட்டுக் குடிநீர் திட்டப் பணிகள் மற்றும் அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனை மேம்பாட்டுப் பணிகள்.

1,300 கிராமங்களுக்குப் பயனளிக்கும் வகையில் 1,230 கோடி ரூபாய் மதிப்பீட்டில் குடிநீர் வழங்கும் திட்டம். இருக்கன்குடி மாரியம்மன் கோயில் பக்தர்களின் வசதிக்காகப் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வாறு மதுரை மற்றும் விருதுநகர் மாவட்டங்களுக்குப் பல்வேறு திட்டங்களை வழங்கியுள்ளார் நம் முதலமைச்சர்.

இந்த மாவட்டங்களுக்கு மட்டும் அல்ல, ஒவ்வொரு மாவட்டத்துக்கும் பார்த்துப் பார்த்து நம் அரசு செய்துள்ளது. அதனால்தான் இன்று இந்தியாவிலேயே வளர்ந்து வரும் மாநிலங்களில் முதலிடத்தில், 11.19 சதவிகித இரட்டை இலக்க வளர்ச்சியுடன் தமிழ்நாடு முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது.

நாம் இவ்வளவு சாதனைகளைச் செய்திருக்கிறோம். இதற்கெல்லாம் ஒன்றிய அரசு நமக்கு ஒத்துழைப்பு அளித்ததா? இல்லை. நாம் கேட்ட நிதியை வழங்கியதா? இல்லை. தமிழ்நாட்டுக்கு என்று ஏதேனும் சிறப்புத் திட்டங்களை வழங்கியிருக்கிறார்களா? இல்லை. எந்தத் திட்டமும் வழங்கவில்லை.

இன்று தேர்தல் அறிவித்தவுடன் பிரதமர் மோடி அவர்களும், அமித்ஷா அவர்களும் மாறி மாறி வருகிறார்கள். தமிழ்நாட்டுக்கு நிதி வரவில்லை. திட்டங்கள் வருவதில்லை. இவர்கள் இருவரும் மாறி மாறி வந்துவிட்டுச் செல்கிறார்கள். ஆனால் இதையெல்லாம் அவர்களுடன் கூட்டணி வைத்திருக்கும் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி கேட்டிருக்க வேண்டும். கேட்கிறாரா? இல்லை. பா.ஜ.கவின் இந்தச் சூழ்ச்சிக்கு இன்று அ.தி.மு.கவும் துணை போய்க் கொண்டிருக்கிறது. இவற்றையெல்லாம் எதிர்த்து, மாநில உரிமைகளுக்காகவும் நம் நிதிக்காகவும் குரல் கொடுக்கக்கூடிய ஒரே தலைவர், ஒரே முதலமைச்சர் நம் தலைவர்தான். இன்று மோடியும் அமித்ஷாவும் தமிழ்நாட்டில் ஒரு நான்கு அடிமைகளைப் பிடித்து வைத்துக்கொண்டால், எப்படியாவது தமிழ்நாட்டுக்குள் நுழைந்துவிடலாம் என்று கனவு கண்டுகொண்டிருக்கிறார்கள்.

இன்று செய்திகளை எல்லாம் நீங்கள் பார்த்துக்கொண்டு இருக்கிறீர்கள். ஒரு கட்சியின் தலைவர் இன்னொரு கட்சியின் அலுவலகத்துக்குச் சென்றால் அது ஒரு பெரிய செய்தியாகப் போடப்படும். ஆனால், இரண்டு நாட்களாகச் செய்திகளில் நாம் என்ன பார்த்துக்கொண்டிருக்கிறோம்? எதிர்க்கட்சித் தலைவரும், அ.தி.மு.கவின் நிரந்தர பொதுச் செயலாளருமான எடப்பாடி பழனிசாமி அவர்கள் அ.தி.மு.க அலுவலகத்துக்குச் சென்றார் என்பதுதான் இப்போது முக்கியச் செய்தியாக ஓடிக்கொண்டிருக்கிறது. அவரின் அலுவலகத்துக்கு அவர் சென்றதே பெரிய செய்தியாக உள்ளது. அது ஏன் என்று யோசித்துப் பார்த்தீர்களா? ஏனெனில், இத்தனை நாட்களாக அவர் வழி தெரியாமல், தன் தலைமை அலுவலகம் டெல்லியில் இருப்பதாக நினைத்து டெல்லிக்குச் சென்றுகொண்டிருந்தார். அமித்ஷாவின் வீட்டுக்குச் சென்றுகொண்டிருந்தார். நம் தலைவர்தான் மீண்டும் மீண்டும் சொன்னார், “எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே, உங்கள் அலுவலகம் இங்கே சென்னையில் இருக்கிறது. நீங்கள் மீண்டும் மீண்டும் டெல்லிக்கு மறைமுகமாகச் சென்று வருகிறீர்கள்” என்று. தலைவர் மீண்டும் மீண்டும் சொன்னதால்தான் இன்று அ.தி.மு.க.வின் தலைமை அலுவலகத்துக்கு அந்தத் தலைவர்கள் எல்லாம் சென்றிருக்கிறார்கள். நாம் தமிழ்நாட்டின் உரிமைக்காக மட்டும் குரல் கொடுக்கவில்லை, அ.தி.மு.க.வின் உரிமைக்காகவும் நாம்தான் குரல் கொடுத்திருக்கிறோம். இதுதான் இன்று அ.தி.மு.க.வின் நிலைமை.

### ஒரு பொருட்டே கிடையாது

இவற்றையெல்லாம் நாம் மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும், அவர்களிடம் சொல்ல வேண்டும். நிச்சயமாகத் தமிழ்நாட்டு மக்கள் இந்த முறை பத்து தோல்வி பழனிசாமியைப் படுதோல்வி பழனிசாமியாக மாற்றப்போவது உறுதி.

நம் கூட்டணி மக்களின் நம்பிக்கையைப் பெற்றிருக்கக்கூடிய கூட்டணி. இன்று பா.ஜ.க ஒரு அணியாக இறங்கியிருக்கிறது. பா.ஜ.க மட்டுமல்ல, அவர்களின் ‘பி டீம்’, ‘சி டீம்’ என்று பல அணிகளை இறக்கியிருக்கிறார்கள். எத்தனை அணிகள் வந்தாலும் வெற்றி பெறப்போவது நம் அணிதான், தி.மு.க அணிதான். நம் தலைவர் அவர்களின் தலைமையில் நிச்சயமாக இந்தத் தேர்தலில் வெற்றி பெறுவது உறுதி.

### தொடர்ந்து தொடர்பில் இருங்கள்

இளைஞர் அணி நிர்வாகிகளிடம் நான் கேட்டுக்கொள்வது என்னவென்றால், அடுத்த 30 நாட்கள் பூத் வாரியாக நம் நிர்வாகிகள் ஒவ்வொரு வீட்டுக்கும் சென்று, ஒவ்வொரு வாக்காளரையும் குறைந்தபட்சம் இரண்டு முறையாவது சந்தித்துப் பேசுவதை உறுதி செய்ய வேண்டும். நம் முதன்மை இலக்கு 18 முதல் 35 வயது வரை உள்ள வாக்காளர்கள்தான். அவர்களை நாம் சென்றடைந்தாக வேண்டும். அவர்களை நோக்கியே நம் தேர்தல் பயணம் அமைய வேண்டும்.

முதலில் அந்தப் பணியை நம் குடும்பத்திலிருந்து தொடங்குவோம். நம் குடும்பத்தினர், பெற்றோர்கள், சகோதரசகோதரிகள், மனைவி ஆகியோரிடம் பிரச்சாரத்தைத் தொடங்க வேண்டும். ஊரில் உள்ளவர்களிடம் எல்லாம் வாக்கு கேட்டுவிட்டு எங்களிடம் கேட்கவில்லையே என்று அவர்கள் வருத்தப்படக் கூடாது. அதேபோன்று நம் உற்றார் உறவினர்கள், நண்பர்கள் ஆகியோரை சந்தித்து வாக்குகளைக் கேட்க வேண்டும்.

மாற்றுக்கட்சிகளிலும் நமக்குத் தெரிந்தவர்கள் இருப்பார்கள். அவர்களையும் சந்தித்து நம் கொள்கைகளைப் பற்றிச் சொல்ல வேண்டும். நம் திட்டங்கள் மற்றும் சாதனைகளைச் சொல்ல வேண்டும். அனைவரையும் சென்றடைய முயற்சி செய்யுங்கள். கழக ஆட்சியில் செய்துள்ள சாதனைகளை ஆதாரங்களுடன் அவர்களிடம் எடுத்துச் சொல்லுங்கள்.

நீங்கள் சந்திக்கும் ஒவ்வொருவரும் உதயசூரியன் சின்னத்துக்கும் நம் கூட்டணிக் கட்சிகளுக்கும் வாக்களிப்பதை உறுதி செய்ய வேண்டும். முக்கியமான ஒரு பணி, யாருடைய பூத்தில் யார் அதிக வாக்குகளைப் பெறுகிறார்கள், யார் வாக்கு வித்தியாசத்தை அதிகரிக்கிறார்கள் என்பதில் நமக்குள்ளேயே ஒரு ஆரோக்கியமான போட்டி இருக்க வேண்டும். இப்போது ஒவ்வொருவரும் எந்த பூத்தில் இருக்கிறீர்கள் என்கிற விவரம் எங்களிடம் உள்ளது. எனவே, எந்த பூத்தில் யார் சிறப்பாகப் பணியாற்றியுள்ளீர்கள், யார் அதிக வாக்குகளைச் சேகரித்துள்ளீர்கள் என்கிற ஆரோக்கியமான போட்டி நிலவ வேண்டும். `இந்த இல்லங்களுக்கு நான் பொறுப்பு, இந்த வாக்குகளுக்கு நான் பொறுப்பு’ என்று திட்டமிட்டு நுணுக்கமாக வேலை செய்தால் மிகப் பெரிய வாக்கு வித்தியாசத்தில் நாம் வெற்றி பெறுவது உறுதி.

### தனித்துத் தெரிய வேண்டும்

எவ்வாறு நான் உங்களைப் பலமுறை சந்தித்து ஊக்கப்படுத்துகிறேனோ, அவ்வாறே நீங்கள் உங்கள் கீழ் உள்ள நிர்வாகிகளைத் தினமும் சந்தித்து ஊக்கப்படுத்துங்கள், அவர்களுடன் தொடர்பில் இருங்கள்.

உங்களில் பல பேர் பி.எல்.ஏ2, பி.எல்.சிகளாக இருப்பீர்கள். அந்தப் பணிகளையும் நீங்கள் கவனத்துடன் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். உங்கள் பூத்தில், உங்கள் தொகுதியில் இளைஞர் அணியின் பணி தனித்துத் தெரிய வேண்டும். அது களத்தில் மட்டுமல்ல, தேர்தல் முடிவிலும் பிரதிபலிக்க வேண்டும்.

மக்களிடம் பேசும்போது மிகக் கவனமாகப் பேசுங்கள். ஒவ்வொரு வார்த்தையையும் கவனத்துடன் பயன்படுத்துங்கள். ஏனெனில், இப்போது அனைவரிடமும் கைபேசி உள்ளது, அனைத்தையும் பதிவு செய்து கொண்டிருக்கிறார்கள். செய்தித் தொலைக்காட்சிகள் நம்மீது ஏதேனும் பழி சொல்ல மாட்டோமா, இளைஞர் அணி நிர்வாகிகள் ஏதேனும் தவறு செய்ய மாட்டார்களா என்று காத்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே, மிகுந்த கவனத்துடன் மக்களைச் சந்தித்துப் பேசுங்கள்.

களத்தில் பிரச்சாரப் பணிகளை மேற்கொள்ளும்போது உங்கள் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்களுடன் கலந்து ஆலோசித்து, அவர்களின் ஒப்புதலைப் பெற்று, பணிகளில் ஈடுபடுங்கள். நிச்சயமாக அவர்கள் உங்களைத் தொடர்ந்து வழிநடத்துவார்கள்.

ஒவ்வொரு நாளும் நீங்கள் எத்தனை பேரைச் சந்திக்கிறீர்கள், எந்தப் பகுதியில் வாக்கு சேகரிக்கிறீர்கள், எத்தனை வாக்காளர்களை நம் ஆதரவாளர்களாக மாற்றியுள்ளீர்கள் என்று ஒரு குறிப்பேடு போட்டு பராமரியுங்கள். தேதி குறிப்பிட்டு, முடிந்தால் புகைப்படங்களுடன் பதிவு செய்து வையுங்கள்.

நான் மீண்டும் பிரச்சாரத்துக்காக மதுரை மற்றும் விருதுநகருக்கு நிச்சயமாக வருவேன். அப்போது உங்கள் குறிப்பேட்டை வாங்கிப் பார்ப்பேன். நீங்கள் என்னிடம் ஆதாரத்துடன் சொல்ல வேண்டும் எத்தனை வாக்குகளைச் சேமித்துள்ளீர்கள், எத்தனை பூத்களை பார்த்துள்ளீர்கள் என்பதைத் தெரிவிக்க வேண்டும்.

நான் உங்களுக்கு மீண்டும் ஓர் உறுதிமொழி அளிக்கிறேன், யார் உண்மையாக உழைக்கிறார்களோ அவர்களுக்கு நிச்சயமாக உரிய அங்கீகாரத்தைப் பெற்றுத் தருவேன். உங்கள் அங்கீகாரத்துக்கு நான் பொறுப்பேற்கிறேன். நம் தலைவர் நம் அனைவரையும் கவனித்துக்கொண்டுதான் இருக்கிறார். யார் எவ்வாறு வேலை செய்கிறோம் என்பதை அவர் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறார்.

இது நமக்கான ஒரு தேர்வு என்று எடுத்துக்கொள்ளுங்கள். இந்தத் தேர்வில் நிச்சயமாக நாம் வெற்றி பெறுவோம். ஆனால், சாதாரண வெற்றி போதாது, சிறப்பான வெற்றியை அடைந்து நம் தலைவருக்குப் பெருமை சேர்க்க வேண்டும்.

பொதுவாக, எதிர்க்கட்சியினர் தி.மு.க.வினரைச் சொல்லும்போது, “தி.மு.க.காரன் ஒரு டீயைக் குடித்துவிட்டு அசராமல் தேர்தல் வேலை பார்ப்பான்” என்று சொல்வார்கள். அதை நாம் கொஞ்சம் மாற்றிக் காட்ட வேண்டும். “அன்பகத்திலிருந்து ஒரு சிங்கிள் தகவல் வந்தால், 234 தொகுதிகளிலும் இளைஞர்கள் இறங்கி வேலை பார்ப்பார்கள்” என்று அவர்களைச் சொல்ல வைக்க வேண்டும்.

தலைவர் நமக்குக் கொடுத்த இலக்கு 200. “வெல்வோம் இருநூறு, படைப்போம் வரலாறு.” ஆனால், இளைஞர் அணி நிர்வாகிகள் நீங்கள் அடுத்த 30 நாட்கள் சரியாக உழைத்தால் 234 தொகுதிகளிலும் நாம் வெற்றி பெறுவதற்கான வாய்ப்பு உள்ளது. அந்த வெற்றி மதுரை மற்றும் விருதுநகர் மாவட்டங்களிலிருந்து தொடங்க வேண்டும்.

குறிப்பாக, மதுரை மாவட்டத்தில் கடந்த முறை தவறவிட்ட மதுரை மேற்கு, திருப்பரங்குன்றம், திருமங்கலம், உசிலம்பட்டி, மேலூர் ஆகிய தொகுதிகளை இந்த முறை கைப்பற்ற வேண்டும். அதேபோன்று விருதுநகர் மாவட்டத்தில் ஸ்ரீவில்லிபுத்தூரை இந்த முறை வென்று காட்ட வேண்டும். எந்தப் போட்டியாக இருந்தாலும் தோற்ற இடத்திலிருந்து வென்று காட்டுவதே உண்மையான வெற்றி. நாம் எங்கே விட்டோமோ அங்கிருந்து நம் கணக்கைத் தொடங்க வேண்டும். அந்த வெற்றியில் இளைஞர் அணியின் பங்கு மிக முக்கியமானது.

இளைஞர் அணியை உருவாக்கிய நம் தலைவருக்குப் பெருமை சேர்க்க, அடுத்த ஒரு மாதம் நேரம் காலம் பார்க்காமல் இளைஞர் அணி நாம் உழைக்க வேண்டும். புதிது புதிதாகப் பலர் வருவார்கள், “இந்தத் தேர்தலுடன் தி.மு.க அழிந்துவிடும்” என்று சொல்வார்கள். அவர்களுக்கு நாம் பதில் சொல்லத் தேவையில்லை, நம் வேலையில் மட்டும் கவனம் செலுத்துவோம்.

### வெட்ட வெட்ட தி.மு.க. வளரும்

அவர்களுக்குப் பேரறிஞர் அண்ணா 1940களிலேயே பதில் சொல்லியிருக்கிறார்: “தி.மு.க.வை அழிக்க நீங்கள் 4 அடிக்கு குழி வெட்டினால், நீங்கள் வெட்டி முடிப்பதற்குள் நாங்கள் 6 அடி வளர்ந்திருப்போம். ஆறடி வளர்ந்துவிட்டோமே என்று நீங்கள் மீண்டும் 6 அடிக்கு குழி வெட்டினால், அதற்குள் நாங்கள் 12 அடி வளர்ந்திருப்போம். நீங்கள் வெட்ட வெட்ட தி.மு.க. வளர்ந்துகொண்டே இருக்கும். உங்களால் எங்களை ஒருநாளும் வீழ்த்த முடியாது.”

இதை இந்தத் தேர்தலில் இளைஞர் அணி நாம் நிரூபித்துக் காட்ட வேண்டும். அந்த உறுதியுடன் தேர்தல் பணிகளில் ஈடுபடுங்கள். நான் மீண்டும் பிரச்சாரத்துக்கு வரும்போது உங்கள் அனைவரையும் நேரில் சந்திக்கிறேன். தலைவர் தொடரட்டும், தமிழ்நாடு வெல்லட்டும். இந்தச் சிறப்பான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த மாவட்டக் கழகச் செயலாளர்களுக்கும், வருகை தந்துள்ள அனைத்து நிர்வாகிகளுக்கும் மீண்டும் நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

### பங்கேற்றவர்கள்:

இதில் அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, பெரியகருப்பன், மூர்த்தி, மாவட்டக் கழகச் செயலாளர்கள் கோ.தளபதி, மணிமாறன், காதர் பாட்ஷா முத்துராமலிங்கம், நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ராணி ஸ்ரீகுமார், சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன், வெங்கடேசன், தங்கப்பாண்டியன், மாநகர மேயர் சங்கீதா இன்பம், சூர்யா கிருஷ்ணமூர்த்தி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முத்துராமலிங்கம், பாலகங்காதரன், மாநகரச் செயலாளர் உதயசூரியன், இளைஞர் அணி மாநில துணைச் செயலாளர்கள் இன்பா ரகு, ஜி.பி.ராஜா, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் தனுஷ்குமார், கிருஷ்ணகுமார், விமல், சௌந்தர் என்கிற சௌந்தரராஜன், இளங்கோ, மாநகர அமைப்பாளர் முத்துச்செல்வம் உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்து கொண்டனர்.